# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.128 /பேரூ/2023
நாள்: 21.07.2023

திரு. K. கண்ணன்,
கீரமங்கலம் அஞ்சல்,
புதுக்கோட்டை மாவட்டம். ... மனுதாரர்

செயல் அலுவலர்,
கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம் .... எதிர்மனுதாரர்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், காமராஜர் சாலை என்ற முகவரியைச் சேர்ந்த திரு.K. கண்ணன் என்பவரது 09.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.05.2023 அன்று பெறப்பட்டு, 128/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், காமராஜர் சாலை என்ற முகவரியைச் சேர்ந்த திரு. K. கண்ணன் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், காமராஜர் சாலை என்ற முகவரியில் அமைந்துள்ள எனது வீட்டில் எனது தாயார் கு. முத்துலெட்சுமி அவர்கள் 25.1.2023 அன்று வயது முதிர்வு காரணமாக காலமானார். அவரது இறப்பினை பதிவு செய்து சான்று வழங்குமாறு கடந்த 10.2.2023 அன்று மனுவில் உள்ளாட்சி பிரதிநிதியிடம் கையெழுத்து கேட்டேன். அவர் கையெழுத்து இடாமல் பேரூராட்சித் தலைவர் முதலில் கையெழுத்து போடவேண்டும் என்று சொல்லி கையெழுத்திட மறுத்து விட்டார். கீரமங்கலம் பேரூராட்சி தலைவர் ஊரில் இல்லை அவர் ஈரோடு இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்று விட்டார். எனவே நான் கீரமங்கலம் பேரூராட்சி அலுவலகத்தில் 14.2.2023 அன்று எனது மனுவை கொடுத்தேன். கீரமங்கலம் பேரூராட்சி அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள்

என்னிடம் தலைவரின் மேசைக்கு சென்றுவிட்டதாக சொன்னார்கள். சிறிது நாட்கள் கழித்து பேரூராட்சி அலுவலகத்தில் கேட்டபோது மனுவை காணவில்லை. தேடிக் கொண்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். அரசு அதிகாரிகள் கெட்ட எண்ணத்தோடு இறப்பு சான்று கொடுப்பதற்கு லஞ்சம் வாங்கும் நோக்கத்தோடு இன்றுவரை எனது தாயார் கு. முத்துலெட்சுமி அவர்களின் இறப்புச்சான்று வழங்க மறுக்கிறார்கள். இதனால் நான் மிகுந்த மன உளைச்சலுக்கும், மன அழுத்தத்திற்கும் ஆளாகி உள்ளேன். இதனால் எனக்கு நிதிஇழப்பும் ஏற்பட்டுள்ளது. எனவே தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவர் அவர்கள் இந்த மனுவை விசாரணை செய்து எனது தாயாருக்கு இறப்பு சான்று பெற்றுத்தரும்படி கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3) கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 26.06.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

திரு. கு.கண்ணன், த/பெ.குமார்சாமி என்பவரின் தாயார் கு. முத்துலெட்சுமி 25.01.2023 வயது முதிர்வின் காரணமாக காலமானார். திரு. கண்ணன் என்பவர் தாயாரின் இறப்புச்சான்று வேண்டி கீரமங்கலம் பேரூராட்சி அலுவலகத்தில் உரிய ஆவணங்களுடன் செயல் அலுவலரிடமோ அல்லது இளநிலை உதவியாளரிடமோ விண்ணப்பத்தினை அளித்திடாமல் உள்ளாட்சி பிரதிநிதியிடம் (வார்டு எண்.12 கவுன்சிலர்) கையெழுத்து கேட்டுச் சென்றுள்ளார். மருத்துவரால் வழங்கப்படும் படிவம் 4அ (இறப்பின் காரணத்திற்குரிய உண்மை சான்றிதழ்) இல்லாததால் மனுதாரர், வார்டு உறுப்பினர் அவர்களிடம் கையெழுத்து கேட்டு சென்றதாகவும், அவர் கையெழுத்திட மறுத்ததாகவும் இதனால் பேரூராட்சி தலைவரிடத்தில் மனுவினை அளிக்க வந்ததாகவும், பேரூராட்சி தலைவர் அவர்கள் ஈரோடு இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்றுவிட்ட நிலையில், பேரூராட்சி தலைவர் அவர்கள் மேசையில் மனுதாரர் வைத்து சென்றுவிட்டதாகவும் மனுவில் குறிப்பிட்டுள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். கீரமங்கலம் பேரூராட்சியில் விண்ணப்பத்தினை முறையாக அளிக்காமலும், தாமதமாவது குறித்து இளநிலை உதவியாளரிடத்திலோ, செயல் அலுவலரிடத்திலோ எவ்வித விபரமும் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. இந்நிலையில் மனுதாரர் 10.5.2023 அன்று புலனம்வழிச் செய்தியாக புகாரினை தெரிவித்தபடியால் உடனடியாக மனுதாரரை அழைத்து அவரிடம் இந்த விபரங்கள் கேட்டறியப்பட்டது. பேரூராட்சி தலைவர் அவர்களிடம் மனுதாரரது விண்ணப்பம் குறித்து கேட்டபொழுது அவரது விண்ணப்பம் தனது அறையில் இல்லை என்று தெரிவித்தார். எனவே மனுதாரரிடம் மனுக்கள் பேரூராட்சி செயல் அலுவலர் இடத்திலோ, இளநிலை உதவியாளர் இடத்திலோ அளிக்கப்பட வேண்டும் எனவும் இல்லை என்றால் தபால் வழியாக செயல் அலுவலருக்கு விண்ணப்பம் செய்யலாம் எனவும், விபரம் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் மனுதாரரால் புதிதாக விண்ணப்பம் 12.05.2023 அன்று செயல் அலுவலரிடம் கொடுக்கப்பட்டு உடனடியாக மனுதாரருக்கு அவருடைய தாயாரின் இறப்பு சான்று இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு உடனடியாக 13.05.2023 அன்று நேரில் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மனுதாரர் 12.05.2023 அன்று விண்ணப்பித்த மனுவினை அசல் நகல்கள், இறப்பு சான்றிதழ் நகல், இறப்பு சான்று வழங்கும் பதிவேடு நகல் ஆகியவற்றை இத்துடன் இணைத்து பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன். எனவே மனுதாரரை வேண்டுமென்றே அலைக்கழிக்கும் எண்ணமோ வேறு பிறகெட்ட

எண்ணங்களோ செயல் அலுவலருக்கோ, கீரமங்கலம் பேரூராட்சியில் பணிபுரியும் அலுவலர்களுக்கு இல்லை என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இனிவரும் காலங்களில் இதுபோன்ற நிகழ்வுகள் ஏற்படாது என்பதையும் பிறப்பு இறப்பு குறித்த அனைத்து தபால்களும் முறையாக பதிவு செய்யப்பட்டு உடன் சான்றுகள் வழங்கிட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

3) இந்நிலையில் இம்முறைமன்ற 21.06.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோருக்கு 05.07.2023 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**4) 05.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

" புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், காமராஜர் சாலை என்கிற முகவரியில் வசிக்கும் நான், எனது தாயார் திருமதி கு. முத்துலட்சுமி என்பவர் கடந்த 25.1.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக காலமானார். அவரது இறப்பினை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் வழங்கக் கோரி 14.2.2023 அன்று கீரமங்கலம் பேரூராட்சியில் மனு அளித்திருந்தேன். சிறிது நாட்களுக்குப் பின்னர் பேரூராட்சியில் மேற்கண்ட இறப்புச் சான்றிதழ் வழங்ககோரி நேரில் சென்று முறையிட்டேன். ஆனால், எனது மனு காணவில்லை என்றும் அதனை தேடி வருகிறோம் என்றும் தெரிவித்தனர். பின்னர் இது குறித்து 10.5.2023 அன்று Face bookல் பதிவிட்டிருந்தேன். அடுத்த நாளே அதாவது 13.5.2023 அன்று என்னை வேறொரு மனு அளிக்கக்கோரி, அதனை பேரூராட்சி அலுவலர்கள் பெற்றுக்கொண்டு உடனே இறப்புச் சான்றிதழ் அளித்துவிட்டனர் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**5) கீரமங்கலம் பேரூராட்சியின் செயல் அலுவலர் 05.07.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

மனுதாரரின் தாயார் திருமதி கு. முத்துலட்சுமி என்பவர் கடந்த 25.1.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக காலமானதைத் தொடர்ந்து மனுதாரர் திரு கண்ணன் என்பவர் அவரது தாயாரின் இறப்புச் சான்று வேண்டி கீரமங்கலம் பேரூராட்சியில் உரிய ஆவணங்களை செயல் அலுவலரிடமோ அல்லது பேரூராட்சி அலுவலரிடமோ தனது மனுவினை முறையாக அளிக்கவில்லை. மேலும் மனு குறித்து செயல் அலுவலரிடமோ அல்லது சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளரிடமோ எவ்வித விவரமும் மனுதாரரால் தெரிவிக்கப்படவில்லை. மனுதாரர் 10.5.2023 அன்று புலனம் வழிச்செய்தியாக புகார் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து மனுதாரருக்கு அவரது தாயாரின் இறப்புச் சான்றிதழ் 13.5.2023 அன்று வழங்கப்பட்டுவிட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களை பேரூராட்சியில் பெறுவதற்கான வழிமுறைகள் குறித்த தகவல்களை பேரூராட்சியின் தகவல் பலகையில் இடம் பெற உரிய நடவடிக்கை உடனே மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்திற்கு என்னால் அனுப்பப்பட்ட 26.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

6) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

புகார் மனுதாரர் திரு.K.கண்ணன் என்பவர் கடந்த 25.1.2023 அன்று வயது முதிர்வின் காரணமாக தனது தாயார் கு. முத்துலட்சுமி என்பவர் காலமானதைத் தொடர்ந்து இறப்பினை பதிவு செய்து இறப்புச் சான்றிதழ் வழங்ககோரி 10.2.2023 அன்று உள்ளாட்சி பிரதிநிதியை அணுகியுள்ளார். அவரின் கையொப்பம் பெற இயலாத நிலையில் 14.02.2023 அன்று பேரூராட்சி அலுவலகத்தில் மனு அளித்ததாகவும் இறப்புச் சான்றிதழ் கிடைக்கப்பெறாத நிலையில், பேரூராட்சி அலுவலகத்தில் நேரடியாக விசாரணை செய்ததில், மனு கிடைக்கப்பெறவில்லை என அறிந்து, இம்முறைமன்றத்தில் புகார்மனு அளித்து விசாரணை நடத்தி இறப்புச்சான்று பெற்றுத்தரக் கோரியுள்ளார்.

மனுதாரரின் புகார் குறித்து கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் இறப்புச் சான்று கோரும் விண்ணப்பத்தினை உரிய ஆவணங்களுடன் செயல் அலுவலரிடமோ, இளநிலை உதவியாளரிடமோ அளிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர் இறப்புச் சான்றிதழ் பெறுவதற்கான வழிமுறைகள் அறியாத நிலையில் பேரூராட்சி அலுவலர்கள் உரிய முறையில் வழிகாட்டியிருக்க வேண்டும். அவ்வாறு யாரும் அவருக்கு அறிவுறுத்தப்படாததால் பேரூராட்சித் தலைவர் அறைக்குச் சென்று அவரது மேஜையில் மனுவை வைத்து சென்றுள்ளார் என மனுதாரர் தனது மனுவில் தெரிவித்துள்ளதாக செயல் அலுவலர் கூறியுள்ள நிலையில் அலுவலக நேரத்தில் பேரூராட்சித் தலைவர் அறைக்குச் சென்று அவர் மேஜையில் மனுதாரர் தமது மனுவை வைத்துவிட்டுச் சென்றது அலுவலக ஊழியர்கள் யாருக்கும் தெரியாமல் போனது வியப்பாக உள்ளது. மனுதாரர் தனது கோரிக்கை மனுவினை பேரூராட்சியில் யாரிடம் அளிக்கப்பட வேண்டும் என அறியாத நிலையில் மனுதாரர் அலைகழிக்கப்பட்டது மிகவும் வருந்ததக்க, மனிதாபிமானமற்ற செயலாக இம்முறைமன்றம் கருதுகிறது. பேரூராட்சி நிர்வாகத்தின் செயலை இம்முறை மன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

மனுதாரர் 10.5.2023 அன்று புலனம்வழி செய்தியாக Face Book–ல் புகார் பதிவிட்டபிறகே, இந்நேர்வில் உடனடியாக மனுதாரரை தொடர்பு கொண்டு புதிதாக மனு பெறப்பட்டு, தீர்வு காணப்பட்டுள்ளது. இவ்வாறு சமூக ஊடகங்களில் செய்தி வந்தபின்னரே மனுதாரருக்கு அவரது தாயாரின் இறப்புச்சான்றிதழ் கிடைத்த நிலையை எண்ணி பேரூராட்சி அலுவலர்கள் வருந்த வேண்டும். மேலும் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றுகள் பெறுவதற்கு வழிமுறை அறியாத பொதுமக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பொதுசேவை செய்யும் அரசு அலுவலகங்களில் சரியான வழிமுறைகளை எடுத்துக்கூறி அவர்களுக்கு உதவிட வேண்டும். மேலும் பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள் மற்றும் பிற சான்றுகள் பெறுவதற்கு உரிய வழிமுறை குறித்த தகவல்களை பொதுமக்கள் அறியும் வண்ணம் பேரூராட்சியின் தகவல் பலகையில் இடம்பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும், சான்றிதழ்கள் கோரிவரும் பொதுமக்களிடம்

அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்து அவர்களுக்கு வழிகாட்ட கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

மேலும் அனைத்து பேரூராட்சிகளிலும் பொதுமக்களுக்கு உதவும் வகையில் இதுபோன்ற தகவல் பலகைகள் இடம்பெறச் செய்வதற்கும் மற்றும் வழிமுறைகள் அறியாத பொதுமக்கள் பேரூராட்சி அலுவலகங்களை நாடினால் அவர்களின் கோரிக்கைகளை கேட்டறிந்து உரிய தகவல்களை அளித்திடவும் அனைத்து பேரூராட்சிகளுக்கும் அறிவுறுத்தி சுற்றறிக்கை வெளியிட வேண்டும் என்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு இம்முறைமன்றம் அறிவுறுத்துகிறது.

2023–ஆம் ஆண்டு, ஜூலை 21–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒப்பம்./–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. K. கண்ணன்,
காமராஜர் சாலை, கீரமங்கலம் அஞ்சல்,
ஆலங்குடி வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்–614 624

2) செயல் அலுவலர்,
கீரமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம்–614 624

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்) பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

உதவிப் பதிவாளர்